## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு

### Uni5 பக்த விஜயம் - 3.ஜனா பாய் அம்மையார் [1300 - 1350 A.D]

---

**முன்னுரை:**

மிக அழகிய எளிய ஆழ்ந்த அன்பு கொண்ட பஜனைப்பாடல்களை மராட்டிய மொழி அபங்கம்] அருளிய பக்தை இவர்.இவரது அபங்கங்கள் மனதை உருக்கும் தன்மை கொண்டவை.சுமார் பத்து வயதிலேயே அபங்கம் பாட ஆரம்பித்தவர்.ஸ்ரீநாம தேவரின் மாணவி - மானஸீக மகள்.முற்பிறவியில் இவர் மதுராவில் க்ருஷ்ணனுக்கு வாசனைத் தைலம் அளித்துத் தன் கூனை நிமிர்த்திக் கொண்டு அவன் மீது ப்ரேமை கொண்ட குப்ஜா என்ற அன்பர் இவள்.பூர்வ ஜென்ம வாசனை தீராமல், மனிதனைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் பரமாத்மாவுக்கே அடியாளாகி வாழ்ந்து, அபங்கம் பாடி சமூஹத்தை உயர்த்தியவர்.

**இவர் மூலம் நாம் பெறும் அறிவு:**

இறைவன் நம் தீராத கஷ்டங்களைத் தீர்த்து வைப்பது எதற்கு?
நம் சுயநல வாழ்வுக்கு மட்டுமா? இல்லை!
நம்மாள் ஏதோ சமூஹ சேவை இருக்கிறது! அதற்காகத் தான்!
ஒரு பிறவியில் அக்கடனைத் தீர்க்காமல் போனால், மறுபிறவியில் தீர்த்து விட வேண்டும் என்பதை ஜனாபாய் உணர்த்துகிறார்.

பண்டரிபுரத்துக்கு ஸ்வாமி தரிசனம் செய்ய வந்த ஒரு தம்பதியினரின் மகள் இவர்.முற்பிறப்பின் வாசனையும் தீராத ஓயாத உயர் சங்கல்பமும் உந்த, பத்து வயதிலேயே தன்னை ஈசனிடம் ஒப்படைத்துக் கொண்டவர் ஜனாபாய்.

**பெற்றோர்களுக்கு ஒரு விண்ணப்பம்!**

தன் பிறவி என்பது பக்திக்கும் ஈஸ்வர சேவைக்குமே என்பதை எடுத்து உரைத்த அவர், பண்டரிபுரத்தை விட்டு வர மறுத்துவிடுகிறார்.பெற்றோரால் அப்படி விட்டுவிட முடியுமா என்று இக்காலப் பெற்றோர்கள் கேத்பீர்கள். குழந்தையின் முற்பிறப்பு வாசனை அதுவே எனில் யாரும் ஒன்றும் செய்ய முடியாது.நாம் நம் குழந்தைகளை வளர்த்து ஆள் ஆக்குகின்றோம் என்ற செருக்கு இன்று பல பெற்றோர்களுக்கு உண்டு.அது தவறு.உங்கள் குழந்தைகள் அவரவர் செய்த கர்மவினைக்கு ஏற்ப வளர்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்தல் அவசியம்.இதனால் பல குழப்பங்கள் தீரும்!

**குருவுடன் சேர்ந்தே இருக்க விரும்பினால்,**

ஆன்மீகச் செல்வம் தேடிச் செல்லும் போது ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்

கொள்வதே வெற்றி தரும்.குறிப்பாக குருவுடனே உடல் ரீதியாகவும் சேர்ந்து பிரியாமல் வாழ ஆசை கொள்ளும் அன்பர்க்கும் மிக மிகப் பொறுமை அவசியம் என்பதை இவர் உணர்த்துகிறார்.

**யார் உயர்ந்தவர்?**

ஜனாபாயின் பெற்றோர்களை இங்கே மதிக்க வேண்டும்.

அவர்களுக்கு எந்த அளவுக்கு ஆன்மீக நாட்டமும் சாதனையும் இருந்தால் இப்படித் தன் குழந்தையை விட்டுப்பிரிவர்?

சமூஹத்தின் முன்னேற்றத்துக்காகத் தன் மக்களை அர்ப்பணிக்கும் ஒவ்வொரு பெற்றோரையும் மதிக்க வேண்டும்.

மக்களைப் படிக்க வைத்து வெளிநாடுகட்கு அனுப்பிவிட்டு பெருமை பேசும் பெற்றோர்களை விட, தன் மக்களை ஊரின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிக்கும் பெற்றோர்களே உயர்வுடையோர்.

**பாண்டுரங்கனே கதி!**

பாண்டுரங்கன் முன்பு சதா பக்தியுடன் பாடல்கள் பாடி, கோயிலில் பல அன்பர்களின் சத்ச'க்கத்தைக் கேட்டு, கிடைத்த ப்ரசாதத்தை உண்டு, சிலர் தரும் உடைகளை அணிந்து கொண்டு, விட்டலனின் துணையில் தன் பெண்மையைக் காத்துக் கொண்டு வாழ்ந்தார் சிறுமி ஜனாபாய்.

**ஸ்ரீநாம தேவரின் கடன்**

இச்சிறுமியைக் கண்டு அவளது நிலை உணர்ந்தார் மஹான் ஸ்ரீநாம தேவர்.அவளது முற்பிறப்பின் ரஹஸ்யத்தை உணர்ந்த அவர் ஜனாபாயை மானஸீக மகளாக ஏற்றுக் கொண்டு வீட்டுக்கு அழைத்து வந்தார்.பாருங்கள் ஜனாபாயின் பெற்றோரின் சரணாகதி வீண்போகவில்லை! இதுவல்லவோ சரணாகதியின் மஹத்துவம்?!

ஸ்ரீநாம தேவரை குருவாக அண்டி ஆன்மீகப் பயிற்சி பெற அல்லவா ஜனாபாய் சங்கல்பத்து இருக்க வேண்டும்?

**ஸ்ரீநாம தேவரின் குடும்பம்:**

தாயார்: குணாயி

மனைவி:ராயாஜி

மக்கள்: விட்டலன், மஹாதேவன், நாராயணன், கோவிந்தன்

**நாம தேவரின் வீட்டில் ஜனாபாய்**

மிக மிக எளிய குடும்பத்தில் வாழ செல்கிறாள் ஜனாபாய்.ஆனால் எதற்காக மிக

மிக உயர்ந்த விட்டலனை ஆன்மீகம் மூலம் பெற.குருநாதரின் திருவடி நிழலின் அன்பு அவருக்கு லௌகீக வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களை மறக்கச்செய்ததே உண்மை.ஆனால் ஆரம்பத்தில் எல்லோர் போலும் அவருள்ளும் மனப்போராட்டம் ஏற்பட்டு இருக்கும்.

**<u>குரு தக்ஷிணை</u>**

குருதேவரின் வீட்டில் ஜனாபாய் ஒரு வேலைக்காரியாகவே தன்னை மாற்றிக் கொண்டு விடுகிறார்.பெற்றொரின் நிலையில் இருந்து தன்னையும் தன் வறுமை நிலையில் ஏற்றுக் கொண்ட மஹானின் சக்திக்குத் தன் குருதக்ஷிணையாக அவரது வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்தார்.இதன் மூலம் குருவின் மனைவிக்கும் தாய்க்கும் ஆன்மீகத்தில் நாட்டம் செலுத்த இன்னும் காலம் கிடைத்தது.ஜனாபாயோ தன் வீட்டு வேலைகள் மூலமே விட்டலனின் அன்பையும் ஆன்மீக ஞானத்தையும் கர்ம யோகியாகவும் பக்தி யோகியாகவும் பெற்று வளர்ந்தார்.

குருதேவர் பாடும் அபங்கங்களும் ஜனாபாயின் அபங்கங்களும் மெதுவாக ப்ரபலம் ஆயின.அன்றாட வாழ்க்கையை ஓட்டிக் கொண்டே எப்படி இறைவனை பாவ கீர்த்தன பக்தி மூலம் ஸ்மரிப்பது என்று ஜனாபாய் உணர்த்தினார்.

பாண்டுரங்கனின் வீரியம் அன்பர் பக்கம் செல்வதை அக்காலத்தில் வாழ்ந்த அன்பர்களும் மிகவும் உயர்ந்த ஸ்ரத்தை கொண்ட பூஜாரிகளும் உணர்ந்தனர்.விட்டலன் அடிக்கடி ஸ்ரீநாம தேவரிடமும் ஜனாபாயிடமும் செல்வதை அவர்கள் உணர்வர்.இதன் மூலம் இருவரின் மரியாதை உயர்ந்தது.

குருவும் மாணவியுமாய் இருவரும் செய்யும் உபன்சாயத்துக்கும் நாம சங்கீர்த்தனைத்துக்கும் மக்கள் ஏங்கி நிற்பர்.

குருதேவருக்குத் தன் கடமைகளைச் செய்வதால் தனக்குள் ஆத்ம சுத்தி நிகழ்வதை ஜனாபாய் உணர்கிறார்.ஆனால் போகப் போக இவரது மரியாதைக்குரிய புகழை நாம தேவரின் தாயால் ஏற்க முடியவில்லை.***கேவலம் தன் மகன் மூலம் ஆன்மீக ஞானம் பெற்ற இவளா இப்படி இருக்கிறாள்?*** என்ற தவறான மனித சிந்தனைக்கு ஆளானார் அத்தாய்.

**கூரையைக் காத்த விட்டலன்**

அன்று ஒரே அடை மழை, பேய்க்காற்று வேறு.
ஊருக்குள் பல குடிசைகள் பறந்தன.

விட்டலனின் அருளால் நாம தேவரின் வீட்டில் கூரை மட்டும் பறந்தது.மழை வீட்டுக்குள் விழாமல் அவனது சுதர்சனம் தடுத்தது.கோவர்த்தனத்தைத் தூக்கிய கிரிதாரி போல் சுதர்சனம் தாங்கி விட்டலன் தன் அன்பரின் குடிசையைக் காத்தான்.வீடு பேறு மாயையால் சிதையக் கூடாமல் இறையருள் காப்பாற்றும் என இது உணர்த்தும்.மேலும் வீட்டின் பல பகுதிகளும் சிதைந்தன.விட்டலனே மறுநாள் கூலியாக வந்து வீட்டைச் செப்பம் செய்தான்.

அனைவரும் விட்டலன் தானே?! கூலியாக வந்தவன் தன்னுள் இருக்கும் விட்டலனை நாம தேவர் மாணவிக்கு அடையாளம் காட்டுகிறார்.அவளும் ஏகாக்ர அத்வைத்த பக்தியால் அதை உணர்ந்து கொள்கிறாள்.

இறைவனின் கால்களைக் கழுவினாள்.அவனது தூய ஆடையின் அழுக்குகளைப் போக்கத் துவைத்தாள், ஆடை உலரும் வரை விட்டலன் அவளது பழைய புடவையைக் கட்டிக் கொண்டான்.பாவ பக்தியில் கட்டுண்ட பரப்ரஹ்மமான விட்டலன் ஜனாபாயுடன் ஐக்யம் ஆகினான்.அவளையும் மூலமெய்ப்பொருளை உணர வைத்தான்.

நாம தேவரின் வீட்டைச் செப்பனிடும் கூலியாக நின்று சேற்றை மிதித்தும் கையால் பிசைந்தும் விட்டலன் பணி செய்தான் என்று வரலாறு கூறும்.

**<u>இறைவனும் கண்ணாடியும்</u>**

தேவரின் வீட்டில் அனைவருடன் சேர்ந்து உண்ட விட்டலன், ஜனாபாய் மிக்க அன்புடன் ஊட்டிய உணவையே அதிகம் உண்டானாம், அவளுடனே உறங்கினானாம்.சதா நம்முள் இறை சக்தி இதை எல்லாம் நம் பக்குவத்து ஏற்பச் செய்யும்.அதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.கண்ணாடி முகம் காட்டும்.ஆனால் அதன் முன் நாம் சென்று நிற்க வேண்டும் அல்லவா? அதே போல் தான் இறைவனும்.பாவ பக்தியின் தரத்தை அவள் தன் குருவுக்கே உணர்த்தினார் என்றால் பாருங்களேன்?

அடிவாங்கிய விட்டலன்

அன்று இரவு நீண்ட காலம் ஏகாந்த பாவ பக்தியில் ஜனாபாய் இறைவனுதன் லயித்துப் போனதால் மிகக் காலம் கடந்து உறங்கினாள்.அதனால் காலையில் விரைவில் எழ முடியவில்லை.அதிகாலையில் அன்றாட உணவுக்கு என கோதுமை அரைத்துக் கொடுக்கும் கடமை வீட்டில் ஜனாபாயின் கடமை.அன்று வேறு அதிகம் விருந்தினர்.கோதுமை அரைத்த பாடில்லை.

இவளது நிலையை ஏற்றுக் கொள்ளாத குணாயி அவளைச் சீண்டுவதும் திட்டுவதுமாக இருக்கிறாள்.விட்டலன் அவளுள் இருந்து அவளை எழுப்பினார்.அபங்கம் பாடிக் கொண்டே வேலை செய்யும்படி கூறிட, அவளும் தசாவதாரங்களை மனித வாழ்க்கையுடன் தொடர்பு செய்து எளிய அழகிய மொழியில் பாடிக் கொண்டே வேலை செய்ய, இறைவனும் அவளுக்கு மாவு அரைக்க ஒத்தாசை செய்ய, குணாயி "காலை வேளையில் குமரிக்குப் பாட்டும் கேடோ?" என்று கோலால் ஒரு அடி விழ அதை விட்டலன் தாங்கி "ஐயோ!" என்று கத்தினான்.

இதை உணர்ந்த நாம தேவர் தன் தாயிடம் அவளது கயமை கொண்ட உள்ளத்தின் கேட்டை எடுத்துக் கூற, அவள் உண்மையில் மனம் மாறினாள்.

அன்று மூலஸ்தானத்தில் விட்டலன் பெற்ற அடித்தழும்புக்கு அர்ச்சகர்கள் மருந்து இட்டனராம்.

## சேலை கட்டிய விட்டலன்

அன்று காலையில் மூலஸ்தானத்தைத் திறந்தால் ஒரே ஆச்சர்யம்!
ஆம் முன் இரவில் சார்த்திய உயர் ரகக் காசிப் பட்டைக் காணவில்லை.விட்டலன் பழைய கந்தல் சேலையுடன் காட்சி தருகிறான்.
ஜனாபாயின் வஸ்த்ரம் அது என்பதை உணர்ந்த பூஜாரிகள் அம்மையாரைக் கண்டு காசிப் பட்டைக் கேட்டனர்.கூடவே ஐயனின் சில ஆபரணங்களும் இருக்கிறதா என்று கேட்க, அவள் தனக்கு அது பற்றித் தெரியாது என்று கூற, அவரைப் புரியாத பலர் அவர் மீது திருட்டுப்பழி சுமத்தினர்.நாம தேவரும் ஜனாபாயும் கவலையே படவில்லை.அனைத்தும் ஈசன் என்று வாழ்வோருக்கு ஏது கவலை?

கழு மரத்தில் ஏற்றிக் கொல்லும் தண்டனை தர ஊர் முடிவு செய்தது.
கழு மரத்தின் முன் ஜனாபாய் ஏதும் அறியாமல் அபங்கம் பாடினார்.
கழு மரத்தை நோக்கிச் செல்லும் போது இறைவன் தடுத்து அவரைக் காத்தனன்.
அதன் பின் இவரது பெருமையும் புகழும் பல ஊர்களுக்கும் பரவியது.
பலர் இவரது அபங்கங்களைப் பாடினர், மாறினர்.

## விட்டலன் எழுதிய வீட்டுப்பாடம்

ஒரு முறை ஸ்ரீஞான தேவர் பண்டரிபுரம் வந்த சமயம் ஜனாபாயின் அபங்கங்களை விட்டலனே கைக்கொண்டு எழுதுவதை உணர்ந்து நாம தேவர் வீடு தேடி அம்மையாரைக் காண விரைந்தார். உயர்ந்த வீடு பேற்றினை நல்கும் பாடல்களை எழுவதே வீட்டுப்பாடம் அன்றோ?

**<u>சாணி மெழுகிய ஜனாபாய்</u>**

ஸ்ரீஞான தேவர் நாம தேவரின் வீட்டுக்கு வந்த போது, சாணியால் வீட்டை மெழுகியபடி அம்மையார் பாடிக்கொண்டு பக்தியால் தன் அகவீட்டை மெழுகிய கதியில் இருக்கக் கண்டு, அவரை வணங்கினார்.பல உயர்ந்த ஆன்மீகப் பெரியோரின் அரவணைப்பில் லௌகீக வாழ்க்கை தன் பெண்மை மனம் மாட்டிக் கொள்ளாமல் காத்து அதை விட்டலனிடம் அவனது பொருளாய் ஒப்படைத்து மண்ணில் பல காலம் பாவ பக்தி செய்து கொண்டும், அபங்கம் மூலம் எளிய மக்களும் மாறும் படி சேவையும் செய்தும் ஜனாபாய் அம்மையார் வாழ்ந்து வீடு பேற்றினைப் பெற்றார்.

ஜனாபாயின் அபங்கத்தை உண்மையான அன்புடன் உச்சரித்தாலே போதும், நம்முள் மாற்றம் வரும் என்பதில் ஐயம் இல்லை! இதோ உங்களுக்காக அம்மையாரின் ஒரு அபங்கம் தரப்படுகின்றது.

**ஏக ஏக விடா பாயீ!**
**மாஜே பண்டரீசே ஆயீ**
**பீமா ஆணி சந்த்ர பாகா**
**துஜ்யா சரணீச்யா கங்கா**
**இது க்யா சஹித த்வாம்பா யாவே**
**மாஜ்யா ரங்கணீ நாசாவே**
**மாஜா ரங்க துஜே குணீ**
**ம்ஹணே நாமா யாஸீ ஜனீ**

**<u>பொருள்:</u>**

பண்டரிபுரம் விட்டு என்னுள் வா விட்டலா!
உன் பாதத்தைக் கழுவும் பீமா ஆறும், கங்கையும் ஒன்று தானே?
உண்மையான அன்புடன் நாம் ரங்க மண்டபத்தில் சேர்ந்து பாடியாடுவோம்!
காரணம் உன்னைக் காண வேண்டும்.
அது தானே வாழ்க்கையில் நித்ய அழியாத ஆனந்தம்!

வேலை செய்யும் போதெல்லாம் இஷ்ட மூர்த்தியை ஏதாவது ஒரு வழியில் த்யானிக்க முயற்சிப்போம்.பாவ பக்தியால் இறைவனை எளிமையாக உணர முயற்சிப்போம்.இறைவனுடன் conditions வேண்டாம்!

ஹரி ஓம்!